# கோபாலபுரத்துக் கோகிலமே!...

## கொற்றவன் கதறியழப் போய் விட்டாயா?......



இந்தித் திணிப்புப் போரில் களங்கள் கண்ட கழகக் காளை தமிழ்மொழி காக்கும் போர்ப் படையின் மாணவ மறவர்! சட்டக் கல்லூரியில் கழகத்திற்கென மாணவப் பட்டாளத்தை உருவாக்கிக் காட்டிய மாண்பாளர்! திராவிட இயக்கத்தில் திகட்டாத தென்மொழி எழுத்தாளர்! தமது எழுத்துப் பணியில் ஆள வந்தார்களுக்கு அடிப் பணியா அரிமா! தவறு இழைப்போரைத் தமது எழுதுகோலால் தண்டிப்பதில் தலை தாழாச்சிங்கம்! வரிசை கட்டி வந்த வார்த்தைப் பகைவர்களைத் தமது எழுதுகோல் வாளால் பந்தாடிய வணங்காமுடி! நெருக்கடி நிலையில் நிலை குலையா நெஞ்சக் குன்றம்! சர்வாதிகாரிகளின் சட்டமன்றக் கூண்டில் ஏற்றப்பட்ட போதும் முரசமாய் ஒலித்த சங்க நாதம்! ஜனநாயகம் காக்க வலிமை மிகு வாதங்களால் முரசொலித்து வென்ற வல்லமையாளர்! தமது சித்திர எழுத்துக்களால் சீர்திருத்தம் கண்ட சிங்கார நடையாளர்; அன்றாடச் செய்தியாய் அரங்கேற்றும் உரையாடல்களில், கட்டுரைகளில், நாடகங்களில் நக்கல் நையாண்டி கலந்து தந்த நவரச நாயகர்! கருத்தோவிய எழுத்துக்களால், எதிரிகளைக் காயப்படுத்தாமல் “நச்” என்று, நாகரிக விமர்சனம் செய்து வந்த சிலந்தியார்! பெரியார், அண்ணாவின் பகுத்தறிவு நடைபயின்ற பண்பாளர்! சனாதன எதிர்ப்புச் சண்டமாருதப் போராளி! தீந்தமிழ் போற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்! உணர்வு மிக்க பல பரப்புரைச் செய்திகள் தந்து கொண்டிருந்த, உறக்கம் கொள்ளா ஊடகவியலாளர்! அனைவரிடத்தும், அரவணைப்பு, அன்புப் பாராட்டிப் பழகும் பரந்த குணத்தால் கடலைப் போல அமைதியானவர்! அச்சமில்லா அறிவினில் அடக்கம் நிறைந்தவர்! சிட்டுக்குருவிகள் கூடு கட்டும் அவர் அடிக்கடி பேச்சினிடையே முறுவலிக்கும் மோனலிசா புன் சிரிப்பாளர்!

பேரறிஞர் அண்ணாவின் நட்பில் பெருமை கொள்ளத்தக்க பிழையிலாச் சீடர். காவிரிக் கரை நீண்டெழும் தஞ்சை மண் தந்த கலைஞரின் மருமகனார்! முத்தமிழ் அறிஞரின் மகளார் செல்வி பெற்ற வாழ்வியல் இணையர்! மூச்சு தோறும் முன்னேற்றக் கழகக் கொள்கையைப் பரப்பி வந்த முரசொலி மாறனாரின் ஆருயிர் இளவல்! தளபதியாரின் கருத்துப் பரிமாற்றங்களுக்கு வடிகாலாக இருந்த வாஞ்சைமிகு வசிட்டர்! கலைஞர் குடும்பத்தில் எஞ்சிய கலைஞர்!கொடிமரம் காத்துக் கொள்கை வழி நின்ற கோபாலபுரத்துக் கொஞ்சும் புறா! இப்படிப் பன்முகம் படைத்த அண்ணன் முரசொலி செல்வம் என் வாழ்க்கையில் கிடைத்த ஐம்பது ஆண்டுக் கால அருமைச் செல்வம் அல்லவா?

“சர்க்காரியா கமிஷன் ஒரு சூழ்ச்சி வலை” எனும் நூலும், “சில நினைவலைகள்” எனும் நூலும், அவர் தீட்டிய கழக வரலாற்றில் வைரக்கல் பதிவின் கால வடுக்களின் அடையாள வழிகாட்டி! கழகக் கருவூலம் மறைந்து விட்டாரே! கதற, கதறக் கழகத்தவர் இதயத்தில் மரணம் எனும் பேரிடி இறங்கி விட்டதே! இயற்கைத் தாய் மடியில் பொன் சிறகு போர்த்தி உறங்கச் சென்று விட்டாரே! கிளை பரப்பி, இலை, தளிராய் விரிந்து, பூ, பிஞ்சு, காய், கனியாய் குலுங்கி, விழுது விட்ட விருட் சத்தின் வேரானது மண்ணில் மறைந்து வாழ்வது போல் வாழ்ந்து வந்த என் அண்ணனை நானும், கழகமும் இழந்து விடடோமே!

நாள் தோறும் அண்ணன், தம்பிகள் நாங்கள் இரண்டு, மூன்று முறையாவது தொலைப்பேசி அழைப்பில் பேசிக் கொள்வோமே!தலைவர் பேச்சைக் கேட்டீங்களா?நிகழ்ச்சிக்குச் சென்று இருந்தீர்களா? படித்தீர்களா? வேறு என்ன செய்தி? என்றெல்லாம் கேட்டுக் கேட்டு மனம் மருகுவாரே. இப்பொழுதுதான் என்னிடம் தலைவர் ஸ்டாலின் பேசினார்… என்றெல்லாம் சொல்லுவாரே! இறக்கும் முன்னர் இரவில் கூட ஆந்திர நடிகர் ஒருவர் பேசிய பேச்சின் விவரம் என்ன? அதற்குத் துணை முதல்வர் உதயநிதி அளித்த பதில் விவரம் என்ன? என்றெல்லாம் என்னிடம் கேட்டு, அவர் அறிந்து வைத்திருந்த செய்திகளுக்கு நான் சரியாகப் பதில் சொல்கிறேனா என்று வினவினாரே?… அடுத்து வரும் முரசொலியில் கட்டுரைக்குத் தயாரானாரே?… ஆனால் காலத் தேவதையின் கோரக் கரங்களின் பிடியில் படுக்கையிலேயே, அவரின் பூ போன்ற மென்மையான உயிரைப் பறித்துச் சென்று விட்டதே!

சிலந்தியார் எனும் பேரில் எழுதும் கட்டுரை ஒன்றினை முரசொலி ஏட்டில் “நிகழ்ச்சி ஒன்றின் மேடையில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள், முன்னாள் ஆந்திரா புதுவை ஆளுநர் தமிழிசை அவர்களை நடத்திய விதம் குறித்து, கடந்த ஜீன் மாதம் 19ஆம் தேதி “பதவிப் படுத்தும் பாடு” என்ற தலைப்பில் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதியிருந்தார். அதைப் படித்து விட்டுச் செல்பேசியில் நான் பேசினேன். பிறகு அவர் எழுத்தைக் கண்டு பெருமைப்பட்ட நான், அவரைப் பற்றியும் அவரது எழுத்தைப் பற்றியும் கவிதை ஒன்றைத் தீட்டி அனுப்பி இருந்தேன்.

அதனை அவர் படித்துவிட்டு, “நன்றி. வணக்கம் .சிறப்பான கவிதை. அந்த வரிகளுக்கு ஏற்புடையவனாக இருந்திட நான் முயற்சி செய்கிறேன். நன்றி.” என்று எனக்குப் பதில் தகவல் அளித்து இருந்தார். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக் கால நட்பில் நான் எதை மறப்பது? எதை விடுப்பது? இதோ அவரைப் பற்றி நான் எழுதிய அந்தக் கவிதை....

உரம்பல போடு கின்றீர்;
உளத்திடைக் கழகம் ஓங்க!
முரசொலி செல்வம் என்ற
முன்னேற்றக் கழகச் சொத்தே!
தரமிகு கருத்துக் கோலத்
தாக்கத்தை ஏற்ப டுத்தும்
வரம் தரும் எழுது கோலால்
வாழ்வெல்லாம் இனிக்கின் றீரே.!

அரசியல் பகைவர் தம்மை
அநீதி இலக்க ணத்தைப்
புரட்டியெ டுக்கும் அடிதான்!
புயல்தான்! பூகம் பம்தான்!
புரவியின் வீறு வீச்சால்
புண்ணாக்கும் உன்றன் சாட்டை!
புலம்பிடு எதிரிக் கூட்ட
வரம்பினைக் தகர்க்க காண்போம்!
வாய்மையால் வெல்வீர் வாழ்க!

நரம்பொலி விரல்கள் மீட்டும்
நாதத்தின் வீணை அன்ன;
பரம்பொருள் பெரியார், அண்ணா
பாதையை நெஞ்சில் போற்றிக்
கரம்பற்றிக் கலைஞர் நின்றார்!
கண்ணேஎம் செல்வம் அண்ணா!
சரமல்லிப் பூவின் வாசம்
தந்திட எழுது கின்றீர்!

எத்தனை வீச்சு! தங்கள்
எழுத்தெல்லாம் கழக மூச்சு!
முத்தினைக் கோத்த மாலை
முகவரி அழகே! என்றும்
சொத்துதான் இயக்கப் பாட்டே!
செகமது தழைக்க என்றும்
வித்தூன்றி வளரச் செய்யும்
விளைநெல் கழனி வார்ப்பே!

விரல்வலி யெடுக்க நாளும்
விழிஇரு பாவை நோக
முரசொலி ஏட்டில் எழுதி
முழக்கத்தை எழுப்பு வாய்நீ!
குரலொலி நாளும் வேண்டும்;
சிலந்தியார் எழுத்து கண்டே
கரவொலி எழுப்பு வாரே
கண்ட நம் தோழர் எல்லாம்!

சரவெடி போன்ற சீறிச்
சிரிக்கின்றீர்! உறுமு கின்றீர்!
சுரம்வர நைய மெல்லச்
சமயத்தில் புடைக்கின் றேரே!
சிரந்தாழ இழுத்துக் கையில்
குட்டவும் செய்கின் றீரே!
மரமண்டை மனித ருக்கு
மந்திரிக் கவும்செய் கின்றீர்!



**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

---

நினைவில் வாழும் திராவிடச் சுடர்
முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர்

## பரிதிஇளம்வழுதி

முன்னாள் – கழக துணை பொதுச்செயலாளர்

### ஆறாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் : 13.10.2024 ஞாயிற்றுக்கிழமை



*எங்களின் அன்பே!*

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இந்திரஜித் வீர அபிமன்யுவாய்,
கழகத் தலைவர் தளபதியாரின் உடன்பிறப்பாய்,
தாங்கள் கழகத்திற்காக பணியாற்றியதை நெஞ்சில் நிறுத்தி
கழகத்தலைவர் *மற்றும்* சின்னவர் தலைமையில்
தொண்டு செய்வோம் என்றும் கழக தொண்டர்களாய்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்*

**உதயகுமாரிஇளம்வழுதி** B.SC.,
**பரிதிஇளம்சுருதி** BCA.,M.A.,LLB.,MC ■ **Y.R.நந்தினி** BHMS
கழக அயலக அணி மாநில துணை செயலாளர்
99 வது வார்டு மாமன்ற உறுப்பினர் – எழும்பூர் தொகுதி
**வி.நிரேஷ்** B.E.,M.Tech., ■ **இ.அனுயாழினி** M.A.,(HR)
**N.நேதாஜியாஷ்** ■ **P.பரிதிவேல்**

**குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்**

---

சிப்காட் பூங்காக்களில் - தொழிற்சாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண

## ‘சிப்காட் - தொழில் நண்பன்’ சந்திப்பு திட்டம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, அக்.13-
தமிழக அரசின், சிப்காட் நிறுவன தொழிற் பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண, ”சிப்காட் தொழில் நண்பன் சந்திப்பு (SIPCOT BIZ BUDDY MEETING)” திட்டம் துவங்கப்பட்டு, மாதந்தோறும் இச் சந்திப்பு நடைபெற்று வருகின்றது.

காஞ்சிபுரம் மாவட்டம், வல்லம் வடகால் தொழிற் பூங்காவில் 200க்கும் மேற்பட்ட தனியார் தொழிற்சாலைகள் இயங்கிவருகின்றன. இங்குள்ள தொழிற்சாலைகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில் தொழில் நண்பன் சந்திப்பு கூட்டம் வல்லம்வடகால் தொழிற் பூங்கா கூட்ட அரங்கில் 10.10.2024 (வியாழக்கிழமை) அன்று நடைபெற்றது.

வல்லம் வடகால் சிப்காட் திட்ட அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற சந்திப்பு கூட்டத்தை நா.கணேசன் , சிப்காட் தலைமை அலுவலக ஆலோசகர் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார். திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலந்து கொண்டார்.

இதில் வல்லம் வடகால் சிப்காட்டில் செயல்படும் பதின்மூன்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் நிறுவனத்திற்கு தேவையான மின்சாரம் , சாலை வசதி, சொத்துவரி உள்ளிட்ட கோரிக்கைகளை தெரிவித்தனர். இதற்கு முந்தைய மாத கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டு தீர்வு காணப்பட்ட கருத்துருக்களுக்கு தொழிற்சாலை உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

வல்லம் வடகால் சிப்காட்டில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை திட்ட அலுவலர் விவரித்தார். சொத்துவரி செலுத்துவது /விதிப்பது குறித்து மேல் அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிய துணை வட்டார வளர்ச்சி அலுவலர் தெரிவித்தார்

மற்ற கருத்துருக்களுக்கான நடவடிக்கைகள் சிப்காட் மூலமாகவும், மற்ற பிற அரசுத் துறைகள் மூலமாகவும், தீர்வு காண எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை, திட்ட அலுவலர் எடுத்துரைத்தார். இதில் வல்லம் வடகால் திட்ட அலுவலர் திருமதி. க.காந்திமதி, உதவி பொறியாளர் ஏ. கோவிந்தசாமி மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.ந.தாட்சாயினி பங்கேற்றனர்.

இதே போன்ற தொழில் நண்பன் சந்திப்பு கூட்டங்கள் 10.10.2024 அன்று ஒரகடம், இருங்காட்டுக்கோட்டை, பிள்ளைப்பாக்கம், மற்றும் திருப்பெரும்புதுார் ஆகிய மற்ற நான்கு சிப்காட் தொழிற் பூங்காக்களிலும் நடைபெற்றது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பா. மனோகரன்

**அக்டோபர் 13 (2020)**



**1986ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பொறுப்புகளை வகித்தவர்.**

**1989ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அத்தொகுதிக்குப் பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**